குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி. எண்.87/2020

அ.சா.3

2023–ம் ஆண்டு செப்டம்பர் 04–ம் தேதி திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சி 3–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. தர்மலிங்கம் | ஜாதி | |
| தந்தை பெயர் | கந்தன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: காலை 12.00 மணி,

**முதல் விசாரணை.**

1. நான் பெரியசாத்தப்பாடியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்கிறேன்.கடந்த 2019–ம் ஆண்டு எனது உறவினர் சூர்யா என்பவருக்கு விபத்து ஏற்பட்டு இறந்து விட்டார். நான் அவரது பிரேத பரிசோதனை நடந்த போது மருத்துவமனை சென்று பார்த்து விட்டு அதன் பின்பு விபத்து நடந்த இடமான ஓமலூர் பிருந்தாவனம் தியேட்டர் அருகே சென்று பார்த்த போது போலீசார் சம்பவ இடத்தை பார்த்து எழுதி படம் வரைந்து விசாரணை செய்தார்கள்.

2. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. எனக்கு கையெழுத்து போட தெரியாது. நான் சம்பவ இடத்தில் போலீசார் விசாரணை செய்த போது கைவிரல் ரேகை தான் வைத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

3. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 07.10.2019–ம் தேதி காலை 7.00 மணியளவில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது நான் சாட்சியாக உடனிருந்து

பார்வை மகஜரில் 2-வது சாட்சியாக கையெழுத்து போட்டு விட்டு தற்போது பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றும், எனக்கு கையெழுத்து போடத்தெரியாது என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

விசாரணை முடிந்த நேரம்: காலை 12.06 மணி,

சாட்சி. தர்மலிங்கம்

ஓம்/- எஸ். ஷர்மிளா,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.